

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதி காவேரிப்பட்டணம் மேற்கு ஒன்றியம் ஆவத்துவாடி ஊராட்சி கிருஷ்ணகிரி மேற்கு ஒன்றியம் ஆலப்பட்டி ஊராட்சி, பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, பர்கூர் வடக்கு ஒன்றியம் ஒப்பதவாடி ஊராட்சி , மத்தூர் வடக்கு ஒன்றியம் நாகம்பட்டி ஊராட்சி, ஊத்தங்கரை வடக்கு ஒன்றியம் காரப்பட்டு ஆகிய ஊராட்சிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் கலைஞர் கனவு இல்லம் திட்டம் 2024–2025ஆண்டிற்கான பயனாளிகளுக்கு பணி உத்தரவு வழங்கும் நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பயனாளிகளுக்கு பணி ஆணையினை வழங்கி சிறப்புறையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மணிமேகலை நாகராஜ்,நாகராஜ், டேம். வெங்கடேசன், கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி , சந்திரன், கதிரவன், கிருபாகரன்,செந்தில், பாலன், நாகராசன், அஸ்லாம், சித்ரா சந்திரசேகர் , கோதண்டன், ஒன்றிய செயலாளர்கள் மகேந்திரன், கோவிந்தன், தனசேகரன், சாந்தமூர்த்தி , அறிஞர், ராஜேந்திரன், குணவசந்தரசு, நரசிம்மன், குமரேசன், ரஜினி செல்வம், பேரூராட்சித் தலைவர் தம்பிதுரை, பர்கூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் அன்பரசன் மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலகர்கள், கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள்,சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்,

### காவிரியில் 75 ஆயிரம் கனஅடி நீர் திறப்பு

# மேட்டூர் அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு!

சென்னை,ஜூலை 20–

காவிரி ஆற்றில் திறக்கப்படும் நீரின் அளவை 75,500 கன அடியாக கர்நாடக அரசு அதிகரித்துள்ளது. இதனால் மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் 30 ஆயிரம் கன அடிக்கு மேல் நீர் வரத்து அதிகரித்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் கேரள மாநிலம் வயநாட்டிலும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. தென்மேற்கு பருவ மழை காரணமாக, கபினி மற்றும் கிருஷ்ண ராஜ சாகர் அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

கபினி அணை நிரம்பியதால் அணையின் பாதுகாப்பு கருதி 3 நாள்களாக உபரி நீர் காவிரியில் வெளியேற்றப்பட்டு வருகிறது. கபினி அணையின் உபரி நீர் வரத்து காரணமாக மேட்டூர் காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில், கபினி அணையில் இருந்து 60 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்பட்டு இருந்த நிலையில், 70,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் கிருஷ்ணராஜ சாகர் அணை உள்ளிட்ட அணைகளிலிருந்து இருந்து நீர் திறப்பு வினாடிக்கு 5000 கன அடியாக உயர்த்தப் பட்டுள்ளது.

நீர் திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதால், காவிரி ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம் ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி திருக்கோவிலூர் வடக்கு,தெற்கு, மேற்கு ஒன்றிய கழக செயல்வீரர்கள் கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக தெற்கு மாவட்டக் கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார், இதில் திருக்கோவிலூர் வடக்கு,தெற்கு,மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட மாவட்ட ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள்,உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞர் அணி,மாணவர் அணி, மகளிர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி,தொழிலாளர் அணி, விவசாய அணி,BLA 2 பொறுப்பாளர்கள்,தொ.மு.ச. நிர்வாகிகள்,கழக முன்னோடிகள் உள்பட அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### கொசஸ்தலையாற்றில் குவிந்து கிடக்கும்

# மணல் திட்டுகளை அகற்றிட நடவடிக்கை எடுத்திடுவீர்!

## காமராஜ் துறைமுகக்கழகத்திற்கு - கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!



சென்னை, ஜூலை 20-

பருவ மழை துவங்கு வதற்குள் கொசஸ்தலையாற்றின் முகத்துவாரத்தில் குவிந்து கிடக்கும் மணல் திட்டுக்களை அகற்றும் 2 கட்டப் பணிக்கு உடனடியாக நிதி ஒதுக்கி, பணிகளை முடித்துத் தரும்படி காமராஜ் துறைமுகக் கழகத்தின் பொது மேலாளருக்கு வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

கொசஸ்தலை ஆறு, சென்னை நகரம் மற்றும் திருவள்ளூரில் உள்ள துணை நகரங்களின் முக்கிய மழைநீர் வழித்தடமாக உள்ளது என்பதையும் சென்னை மக்களுக்குக் குடிநீரை வழங்கும் பூண்டி, செங்குன்றம் மற்றும் சோழவரம் ஏரிகளின் உபரி நீரும் எண்ணற்ற சிறு சிறு குளங்களின் உபரிநீரும் கொசஸ்தலையாற்றின்தான் கலக்கின்றன என்பதையும் இவ்வாறு பெருகி வரும் மழை நீரை எண்ணூர் முகத்துவாரம் வழியாக வங்கக்கடலில் கொசத்தலையாறு சேர்க்கின்றது என்பதையும் தாங்கள் அறிவீர்கள். இந்த முகத்து வாரப் பகுதி காமராஜர் துறைமுகத்தின் மிக அருகே அமைந்துள்ளது. இயற்கையின் கொடையாக அங்கு வளர்ந்து செழித்திருக்கும் மாங்குரோவ் காடுகள், பல்வகை தாவரங்கள் மற்றும் உயிரினங்களின் உறைவிடமாக உள்ளதுடன் நீரிலுள்ள கார்ப்பான் கழிவுகளை குறைக்கவும் செய்கின்றது.

எண்ணூர் சிற்றோடைகளின் பக்கவாட்டில் அமைந்துள்ள நெட்டுக்குப்பம், தாழான்குப்பம், காட்டுகுப்பம், எண்ணூர்குப்பம், சின்ன குப்பம், பெரியகுப்பம் மற்றும் முகத்துவாரக்குப்பம் முதலான மீனவர்களின் கிராமங்கள் கடல் அரிப்பாலும், கொசஸ்தலையாற்றின் வெள்ளப் பெருக்காலும் மழைக்காலங்களில் பெரிதும் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றன. கப்பல்களின் போக்குவரத்துக்காக துறைமுகத்தை ஒட்டி மணல் திட்டுக்கள் டிரெட்ஜிங் மூலம் அகற்றப்படுவதால் இந்த மணல் திட்டுக்கள் முகத்துவாரப் பகுதியில் குவிந்து முகத்துவாரம் வழியே மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களின் படகுகளுக்கு போக்குவரத்துத் தடையை ஏற்படுத்துகிறது. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது.

இவ்வாறு மணல் திட்டுக்களால் ஏற்படும் பாதிப்புகளைச் சீர் செய்திட, காமராஜர் துறைமுகத்தின் தெற்காக எண்ணூர் முகத்துவாரத்தின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதியில் தடுப்புச் சுவர் அமைப்பது தான் தீர்வாகும் என்று கண்டறியப்பட்டது. இத்திட்டத்திற்காக 22.10.2022 அன்று காமராஜர் துறைமுகம் மணல் திட்டுக்களை அகற்றி தடுப்புச் சுவர் கட்டும் பணிக்காக ரூ.156.2 கோடியை ஒதுக்கியதையும் தங்களுக்கு நினைவூட்டுகின்றேன்.

பின்னர் ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறை கடலோரம் ஒழுங்காற்று மண்டலத்தின் ஒப்புதலைப் பெற்றுத் தந்தது. 22.02.2023 அன்று, இறுதியாக இந்தப் பணி துவங்கப்பட்டது. முகத்துவாரத்தில் சுமார் 5,30,000 கனமீட்டர் அளவிற்கு மணல் அகற்றப்பட்டு முகத்துவாரத்தில் இரு புறமும் தடுப்புச்சுவர்கள் கட்டப்பட்டு ஒன்றிய அரசின் கடலோர ஒழுங்காற்றுத் துறையின் நிபந்தனை களின் படி இத்திட்டத்தின் முதல் கட்டப்பணி முடிக்க ப்பட்டுள்ளது.

அடுத்த கட்டப்பணி (பேஸ் 2) முகத்துவாரத்தின் 550 மீட்டர் முதல் 2000 மீட்டர் வரை, அதாவது அங்குள்ள இரயில்வே பாலம் வரை, மணல் திட்டுக்களை அகற்ற வேண்டியுள்ளது. ஏறத்தாழ 10,69,700 கன மீட்டர் அளவிற்கு மணல் அகற்றப்பட வேண்டும். ஒன்றிய அரசின் கடலோர ஒழுங்காற்று மண்டலத்தின் (C.R.Z) நிபந்தனைகளின் படி இப்பணி; காமராஜர் துறைமுகத்தின் நிதி ஒதுக்கீட்டைப் பெற்று செய்யப்பட வேண்டும். காமராஜர் துறைமுகக் கடிதம் இதுவரை இத்திட்டத்தின் 2-ஆம் கட்டப் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை.

வடகிழக்கு பருவமழையின் போது இப்பகுதிகளில் வாழும் மீனவ மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளிலிருந்து அவர்களை காக்க கொசஸ்தலையாற்றிலிருந்து கடலுக்குள் வெளியேற்றப்படும் வெள்ள நீர் மணல் திட்டுக்களால் தடுக்கப்படாமல், கடலில் கலக்கச் செய்ய வேண்டும்.

எனவே, இத்திட்டத்தின் 2ஆம் கட்டப் பணிகளை ரூ.70 கோடியை உடனடியாக வழங்கிட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படி தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

காமராஜர் துறைமுகக் கழகம் உடனடியாக தேவையான நிதியை ஒதுக்கீடு செய்தால் இப்பணிகள் துவங்கப்பட்டு வடகிழக்கு பருவமழைக் காலத்திற்கு முன்பு இப்பணிகளை முடித்திட இயலும்; மீனவ மக்களும் வெள்ள அபாயங்களிலிருந்து காப்பாற்றப்படுவார்கள்.

இவ்வாறு டாக்டர். கலாநிதி வீராசாமி அக்கடிதத்தில் கேட்டுக்கொண்டார்.

### கனிமொழி கருணாநிதி எம்.பி.யின் கோரிக்கையை ஏற்று

# தூத்துக்குடி - மேட்டுப்பாளையம் வாராந்திர ரயில் சேவை தொடக்கம்!

## "பொதுமக்கள் பயன்பெறுவீர்!" மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை!



தூத்துக்குடி, ஜூலை 20-

தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களின் கோரிக்கையை ஏற்று தூத்துக்குடி - மேட்டுப்பாளையம் வாராந்திர ரெயில் சேவை தொடங்கப்பட்டுள்ளது. இதனை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை விடுத்துள்ளார்.

அது வருமாறு:-

கடந்த 2006-2011 தி.மு.க. ஆட்சிக்காலத்தில் நான் அமைச்சராக இருந்தபோது அன்றைய ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைத்து தூத்துக்குடி - கோயம்புத்தூர் லிங்க் எக்ஸ்பிரஸ் ரெயில் சேவை தொடங்கி நடைபெற்று வந்தது. கொரோனா காலத்தில் இந்த ரெயில் நிறுத்தப் பட்டது. நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் நிறுத்தப்பட்ட தூத்துக்குடி - கோவை ரெயில் சேவையை மீண்டும் தொடங்க வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வந்தார்கள்.

அது காலதாமதம் ஆகிய காரணத்தால் தூத்துக்குடி - மேட்டுபாளையம் ரெயில் சேவை வேண்டும் என கடந்த 20.12.2022 அன்று ஒன்றிய ரெயில்வே அமைச்சருக்கு கடிதம் எழுதியதோடு மட்டுமல்லாது தொடர்ந்து நேரிலும் வலியுறுத்தி வந்ததார்கள். அவர்களின் கோரிக்கையை ஏற்று தற்சமயம் ஒன்றிய ரெயில்வே துறை தூத்துக்குடி - மேட்டுபாளையம் வாராந்திர ரெயில் சேவையை புதிதாக அறிவித்துள்ளது.

இந்த புதிய ரெயிலானது 19.07.2024 வெள்ளிக்கிழமை மேட்டுப்பாளையத்தில் தொடங்கப்படுகிறது. அதன்படி வாரத்தில் வெள்ளி, ஞாயிறு ஆகிய இரு தினங்கள் மேட்டுப்பாளையத்தில் இருந்தும், வியாழன், சனி ஆகிய இரு தினங்கள் தூத்துக்குடியில் இருந்தும் இயக்கப்படுகிறது.

20.07.2024 சனிக்கிழமை இரவு 10.50 மணிக்கு தூத்துக்குடியில் இந்த புதிய ரெயில் வேலை தொடங்கி வைக்கப்படுகிறது. இரவு 10.50 மணிக்கு தூத்துக்குடி யில் புறப்படும் இந்த ரெயிலானது, கோவில்பட்டி, சாத்தூர், விருதுநகர், மதுரை, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பழனி, உடுமலைப் பேட்டை, பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, கோயம்புத்தூர், மேட்டுப்பாளையம் ஆகிய ரெயில் நிலையங்களில் நின்று செல்லும்.

மேட்டுப்பாளையத்தில் இரவு 7.35 மணிக்கு புறப்படும் ரெயிலானது அதே மார்க்கத்தில் தூத்துக்குடிக்கு அதிகாலை 4.20 மணிக்கு வந்து சேரும். தூத்துக்குடி மக்களின் நலனுக்காக இந்த ரயில் சேவையை ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி பெற்று தந்த கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களுக்கு நன்றி தெரிவித்து பொதுமக்கள் இந்த ரெயில் சேவை வசதியை பயன்படுத்திக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# உச்சநீதிமன்ற நீதிபதிகளாக-கோட்டீஸ்வர் சிங், மகாதேவன் பதவியேற்பு!

## தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்!

புதுடெல்லி, ஜூலை 20-

உச்சநீதிமன்ற நீதிபதிகளாக என்.கோட்டீஸ்வர் சிங், ஆர்.மகாதேவன் ஆகிய இருவரும் நேற்று முன்தினம் பதவியேற்றனர்.

ஜம்மு காஷ்மீர் உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி என்.கோட்டீஸ்வர் சிங், சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி ஆர்.மகாதேவன் ஆகிய இருவரையும் உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்க ஒன்றிய அரசுக்கு கொலீஜியம் அமைப்பு பரிந்துரை செய்திருந்தது. இதனையேற்ற ஒன்றிய அரசு, இருவரின் பெயர்களையும் குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்தது.

இதனையேற்று என். கோட்டீஸ்வர் சிங், ஆர். மகாதேவன் ஆகிய இருவரையும் உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நியமித்து குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

இந்நிலையில், கோட்டீஸ்வர் சிங் மற்றும் ஆர். மகாதேவன் ஆகிய இருவரும் உச்சநீதிமன்ற நீதிபதி களாக நேற்று நேற்று முன்தினம் பதவியேற்றனர். உச்சநீதிமன்றத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், கோட்டீஸ்வர் சிங் மற்றும் மகாதேவனுக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் பதவிப் பிரமாணம் செய்தார். புதிய நீதிபதிகள் பதவியேற்றதை தொடர்ந்து உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகளின் எண்ணிக்கை 34 ஆக உயர்ந்துள்ளது.

சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக இருந்த மகாதேவன், உச்சநீதிமன்ற நீதிபதியாக பொறுப்பேற்ற நிலையில், சென்னை உயர்நீதிமன்றத்தின் புதிய பொறுப்பு தலைமை நீதிபதியாக கிருஷ்ணகுமார் பதவியேற்றுக் கொண்டார்.

### 8 லட்சம் வங்கி ஓய்வூதியர்களுக்கு

# ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் நீதி வழங்க வேண்டும்!

## பாரத் ஸ்டேட் வங்கி முன்னாள் தொழிற்சங்கத் தலைவர்கள் கூட்டமைப்பு வேண்டுகோள்!

தஞ்சாவூர், ஜூலை 20-

ஒன்றிய அரசு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்ய உள்ள நிலையில், அதில் 8 லட்சம் வங்கி ஓய்வூதியதாரர்களின் நலன்களை அளிக்கும் வகையில் நீதி வழங்கப்பட வேண்டும் என்று பாரத ஸ்டேட் வங்கி முன்னாள் தொழிற்சங்க தலைவர்கள் கூட்டமைப்பின் தலைவர் எஸ்.பி. இராமன் மற்றும் செயலாளர் எம்.கே. மூர்த்தி, ஆகியோர் இணைந்து வெளயிட்டுள்ள அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இது குறித்து அவர்களது அறிக்கை வருமாறு:-

நாட்டு நலனையும், அடித்தட்டு மக்களின் பொருளாதார மேம்பாட்டையும் வங்கி ஓய்வூதியர் நிதி சார்ந்த நலனையும் நிதி நிலை அறிக்கை உறுதி செய்ய வேண்டும்

பொதுத்துறை வங்கிகள் நாட்டுடமையாக்கப்பட்டு 55 ஆண்டுகளை நிறைவு செய்த பின்னரும், நாட்டுடமையாக்கப்பட்டதற்கான நோக்கங்களை முழுமையாக நிறைவேற்றப்படாதது நாட்டின் வளர்ச்சியில் நாட்டம் கொண்டோரின் மனதில் ஆழமான பாதிப்பை உருவாக்கி உள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளில் பல்வேறு துறைகளில் கணிசமான வளர்ச்சி பதிவு செய்யப்பட்டிருந்தாலும், கடந்த ஜூன் மாதம் 'இந்தியா டுடே' நடத்திய ஆய்வின் படி ஏழை எளியவர்களின் சதவிகிதம் 20.8 சதவிகிதமாக இருப்பதை அறிந்து கலக்கத்தை வெளிப்படுத்தும் பொருளாதார நிபுணர்களின் கருத்தை ஒன்றிய அரசு ஆழ்ந்த பரிசீலனைக்கு உட்படுத்த முன் வர வேண்டும்.

வர்த்தகச் சூதாடிகளுக்கும் கார்ப்பரேட் நிறு வனங்களுக்கும் அளித்த வரம்பற்ற கார்ப்பரேட் வரிச் சலுகையால் ஒன்றிய அரசுக்கு 1,00,241 கோடி வரி இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று எழுத்து மூலம் நாடாளுமன்ற மேலவையில் நிதித்துறை இணையமைச்சரின் பதில் நாட்டு மக்களிடையே அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது. கடந்த மார்ச் 2023 வரை பொதுத் துறை வங்கிகள் வழங்கிய கடனில் 14,56,226 கோடி தள்ளுபடி செய்யப் பட்டிருப்பதாக நாடாளுமன்றத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை பெருமளவில் பாதிக்கும் என்ற கருத்தை ஒன்றிய அரசு கவனமாக கருத்தில் கொண்டு தகுந்த கொள்கைகளை வடிவமைப்பத்தோடு பாரபட்சமின்றி செயல் படுத்தவும் முன்வர வேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தை நலிவடையச் செய்த பெருந்தனக் காரர்களுக்கு காட்டப்பட்ட கருணை, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த காலம் கருதாது உழைத்த எட்டு லட்சம் வங்கி ஓய்வூதியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். விண்ணை முட்டும் விலைவாசியை எதிர் கொண்டு ஓய்வூதியத்தை மட்டுமே நம்பி வாழும் மூத்த குடிமக்களுக்கு 10 லட்சம் ரூபாய் வரை வருமான வரி விலக்கு ஒன்றிய மத்திய அரசு முன் வரவேண்டும்.

கடந்த 2014 ஆம் ஆண்டு இறுதியில் பொதுத்துறை வங்கிகள் ஈட்டிய இலாபம் அதிகாரப்பூர்வ புள்ளி விவரங்களின் படி 30,859 கோடி ரூபாய் ஆகும். கடந்த மார்ச் 2024 ஆம் ஆண்டு பொதுத்துறை வங்கிகள் ஈட்டிய இலாபம் 1,41,203 கோடியாக உயர்ந்துள்ளது.

கடந்த 1995 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் படி எட்டு லட்சம் வங்கி ஓய்வூதியர்களுக்கும் ஓய்வூதிய சீரமைப்பு (PENSION UPDATION) வழங்க முப்பது ஆண்டுகளாக தாமதம் செய்து வரும் இந்திய வங்கிகள் நிர்வாகத்தின் போக்கை தடுத்து நிறுத்தி நீதி வழங்க நிதியமைச்சர் முன்வர வேண்டும்.

'உழைப்பவரே உயர்ந்தவர்' என்ற கருத்தோட்டத்தை கவனத்தில் கொண்டு, 'தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி' என்ற சட்ட நடைமுறையை ஆழ்ந்து பரிசீலனை செய்து நாட்டின் நலனையும் வங்கியின் வளர்ச்சியையும் ஒரு சேர உறுதி செய்த எட்டு லட்சம் வங்கி ஓய்வூதியர்களுக்கு நீதி வழங்க நிதி நிலை அறிக்கை மூலம் நிதியமைச்சர் முன்வர வேண்டும்.

இவ்வாறு அவர்கள் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.



ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி,தா.பழூர் ஒன்றியம், நாயகனைப்பிரியாள் ஊராட்சி, கீழமிக்கேல்பட்டியில், புனித மிக்கேல் அரசு உதவி பெறும் பள்ளியில்,சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் காலை உணவுத் திட்டத்தினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் உதவி திட்ட அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள், பெற்றோர்கள், கழகத்தோழர்கள் கலந்து கொண்டனர்.

# திருக்கோவிலூரில் ஒன்றியக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

## வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கள்ளக்குறிச்சி, ஜூலை 20-

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம் ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட திருக்கோவிலூர் வடக்கு, தெற்கு, மேற்கு ஒன்றிய கழக செயல்வீரர்கள் கூட்டம் சந்தைப்பேட்டை பகுதியில் அமைந்துள்ள எம்.ஜே.திருமண மண்டபத்தில் ஒன்றிய கழக அவைத் தலைவர்கள் என்.பொன்ரங்கம், வி.தமிழரசன்,ஏ. கண்ணன் ஆகியோர் தலைமையில், பார்வையாளர் செல்வராஜ்,ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.ராஜேந்திரன், எஸ். அய்யனார்,

வி.கிருஷ்ண மூர்த்தி, ஒன்றிய குழு பெருந்தலைவர்கள் திருக்கோவிலூர் அஞ்சலாட்சி அரசகுமார், உளுந்தூர் பேட்டை ராஜவேல், உளுந்தூர்பேட்டை நகர மன்ற துணைத் தலைவர் வைத்தியநாதன், மாவட்ட கவுன்சிலர் கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த செயல் வீரர்கள் கூட்டத்திற்கு கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் க.வசந்தம் கார்த்திகேயன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தல் வெற்றிக்காக பாடுபட்ட கழக உடன்பிறப்புகளுக்கு நன்றி தெரிவித்து இனிவரும் காலங்களில் கழக நிர்வாகிகள் எவ்வாறு கழக ஆக்க பணிகளை துரிதப் படுத்தி மேற்கொள்ள வேண்டும் எனவும் விளக்கிக் கூறியும் சிறப்புரையாற்றினர்.

இக்கூட்டத்தில் திருக்கோவிலூர் வடக்கு, தெற்கு, மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள்,ஒன்றிய குழு பெருந்தலைவர், துணைத் தலைவர், கிளைக் கழக செயலாளர், மாவட்ட ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் உள்பட அனைவரும் கலந்து கொண்டனர்.



பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் பொம்மிடி,பி.பள்ளிப்பட்டி,பையர்நத்தம் ஆகிய ஊராட்சிகளில் அந்தந்த ஊராட்சி மன்ற அலுவலக வளாகங்களில் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களிடையே அடிப்படை வசதிகள் மற்றும் தனிநபர் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது.உடன் ஒன்றிய கழக துணை செயலாளர் ஜாகிதாசெரீப்,பி.பள்ளிப்பட்டி ஊராட்சிமன்ற தலைவர் திருமலாதினேஷ்,மாவட்ட கழக பிரதிநிதி பன்னீர்செல்வம் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.